1974 மார்ச் 7] [திரு. த. சோனையா]

அரசுடைமையாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல செய்தி. எதிர்க்கட்சிக்காரர்கள் இந்த ஒரு செய்தியையாவது வரவேற்றிருக்க வேண்டும். இதைப்பற்றி சட்டமன்றத்திலும், பொது மேடைகளிலும் பேசி வந்த கம்யூனிஸ்ட் கட்சி மெம்பர்கள் இதை வரவேற்று ஒரு வார்த்தையாவது சொல்வார்களா என்று எதிர்பார்த்தேன். அவர்கள் அதைப் பற்றிக் குறிப்பிடவே மறந்துவிடுகிறார்கள்.

விலைவாசி ஏறிவிட்டது என்று பேசுகிறார்கள். பல பொருள்களின் விலை ஏறியிருந்தாலும் வெல்லத்தின் விலை இன்று சரிந்துவிட்டது. கரும்பு உற்பத்தியாளருக்குச் செலவு அதிகமாகிறது. ஒரு ஏக்கருக்கு இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய் உற்பத்திச் செலவாகிறது. மார்க்கெட்டில் ஏற்கனவே 20 ரூபாய்க்கு விற்ற வெல்லம் இன்று 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்படும். ஆகவே, வெல்லத்திற்கு விலை நிர்ணயம் செய்து கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு ஆதரவு தரவேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

(பிற்பகல் 1-30)

(4) அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்தும் வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடி, பேரவையின் நிகழ்ச்சி நிரல், அச்சிட்டு உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 156 (3)-க்கு இணங்க கீழ்க் காணும் மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் 11—3—1974-ம் நாள் திங்கட்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் சட்டப் பேரவைத் துறைச் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும்—

3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.

39—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.

53—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு.

43—எழுதுபொருள்—அச்சுத் துறை.

31—பின்தங்கிய வகுப்பினர் நலன்.

6—பத்திரப் பதிவுத் துறை.

34—உணவுப் பொருள் வழங்கல்.

55—பல்வகை மூலதனச் செலவு.

20—வேளாண்மை.

48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

22—கால்நடை வளர்ப்பு.

17—கல்வி.

30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

21—மீனளம்.

18—மருத்துவம்.

19—பொதுச் சுகாதாரம்.

47—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர்வழங்கல் குறித்த மூலதனச் செலவு.

33—நகர்ப் பகுதி வளர்ச்சி.

15—காவல் துறை.

16—தீயணைப்புப் பணிகள்.

ஏனைய மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்களை 13—3—1974-ம் நாள் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்க வேண்டும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS